# நாளாகமத்தின் முதலாம் புத்தகம்

"நாளாகமம் " என்று பெயர் பெற காரணம்

## "நாளாகமம் " என்று பெயர் பெற காரணம்

- ☐ நாளாகமம் என்றால் "நாட்களின் வார்த்தைகள் (நிகழ்வுகளும்,கணக்குகளும்)" அல்லது "தேசத்தின் பயணப் பதிவேடுகள்'
- ☐ இது ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு எழுதப்பட்ட இஸ்ரவேலின் வரலாறு
- ☐ 1ம், 2ம் நாளாகமத்தின் புத்தகங்கள் ஆரம்பத்தில் எழுதப்பட்டபோது ஒரே புத்தகமாகவே இருந்தது.
- ☐ கிரேக்க மொழிபெயர்ப்பான Septuagint இதை இரண்டு புத்தகங்களாளக பிரித்தது.

## ஆக்கியோனும் தகவல்களும்

- ☐ எஸ்றாவால் எழுதப்பட்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம்
- ☐ ஒரு ஆசாரியனுக்குரிய கண்ணோட்டத்தோடு எழுதப்பட்டிருக்கிறது
- ☐ எஸ்றாவின் புத்தகத்திற்கு ஒத்ததாக இருக்கிறது
- ☐ நாளாகமத்தின் இறுதி அதிகாரத்தின் வசனங்கள் எஸ்றாவின் முதல் அதிகாரத்தின் வசனங்களுக்கு ஒத்திருக்கிறது.
- ☐ கிமு 550-430 காலப்பகுதியில் எழுதப்பட்டிருக்ககூடும்

- ☐ பாபிலோனிய சிறையிருப்பில் இருந்தபோது பேரரசனான கோரேஸ் யூதர்கள் எருசலேமுக்கு திரும்பிச்சென்று அங்கு ஆலயத்தை கட்டிக்கொள்ளலாம் என்று கட்டளை பிறப்பித்த நாட்களில் எழுதப்பட்டிருக்கலாம் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு (2நாளா 36:20-33)

- ☐ அதிகாரங்கள் 29
  வசனங்கள் 941

## இந்தப் புத்தகத்தின் நோக்கம்

- 1 நாளாகமத்தின் சம்பவங்கள் சொல்லப்பட்டுள்ள காலம் 2 சாமுவேல் மற்றும் 1 இராஜாக்களில் சொல்லப்பட்ட காலத்தை பிரதிபலிக்கிறது.

- நாளாகமத்தின் எழுத்தாளர் 1நாளாகமத்தில் தாவீதின் அரசாட்சியைக் குறித்த காரியங்களை சொன்னபோதிலும் சாமுவேல் மற்றும் இராஜாக்கள் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள பல சம்பவங்களை சொல்லாமல் விட்டுவிடுகிறார்.

- எடுத்துக்காட்டாக 1 நாளாகமத்தில் தாவீது பத்சேபாளுடன் விபசாரம் செய்தது குறிப்பிடப்படவில்லை (2 சாமு 11)

- 1-ம், 2-ம் நாளாகமத்தின் புத்தகங்களில் 2சாமுவேலில் சொல்லப்படாத நிகழ்வுகள் சொல்லப்படுகிறது.

- தாவீது ஆலயத்தை கட்டுவதற்கு ஆயத்தம் செய்தல்

- ஆலயத்தின் ஆராதனை ஒழுங்குகள்

- நாளாகமம் தேவனுக்கடுத்த காரியங்களில் தாவீதுக்கு இருந்த ஆர்வத்தை முக்கியத்துவப்படுத்துகிறது.

- உடன்படிக்கைப் பெட்டியை திரும்பக் கொண்டுவருதல்

- தேவனுக்காக ஆலயத்தை கட்டுகிற வாஞ்சை

- இந்த புத்தகம் எழுதப்பட்டபோது தாவீதின் வாரிசுகள் யாரும் இஸ்ரவேலில் அரசர்களாயிருந்து அரசாளவில்லை.

- ஆகவே பாபிலோனில் மீதியாயிருந்து திரும்பியிருந்த மக்களுக்காக எழுதப்பட்டது.

- பாபிலோனிய சியைிருப்பில் 70 ஆண்டுகள் கழிந்த நிலையில் யூதர்களின் அரசியல், சமூக அதிகாரம் அரசியல் ஆட்சியாளர்களை காட்டிலும் மதரீதியான அதிகாரமுள்ள வர்களிடத்திலேதான் இருந்தது.

- வாக்களிக்கப்பட்ட நிலப்பரப்பிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்த போதிலும். சிறையிருப்பிற்கு பின்னரும் தேவனுடைய ஜனங்கள் இன்னும் அழியாமல் தொடருகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதே நாளாகமத்தை எழுதியவரின் நோக்கம்.

- மேசியாவாகிய இரட்சகரை பெற்றுக்கொள்ள பாத்திரராகும்படி தேவன் வரலாற்றின் வழியே கிரியை செய்து ஒரு தேசத்தை தனிமைப்படுத்தி அதை பாதுகாத்தார்.
-
- இந்தப் புத்தகம் எதிர்காலத்தில் வரவிருக்கும் மேசியாவாகிய இரட்சகருக்காக ஜனங்களை ஆயத்தமாக்கும்படி இஸ்ரவேலின் வரலாற்றை ஒரு ஆசாரிய, ராஜரீக கண்ணோட்டத்துடன் சொல்லுகிறது.

## இஸ்ரவேல், யூதா என்னும் இரண்டு இராஜ்யங்கள்

- சவுல் (40 years)
- தாவீது (40 years)
- சாலொமோன் (40 years)
- வட ராஜ்யம் (210 Years)
- தென் ராஜ்யம் (345 Years)

- இஸ்ரவேலர் ராஜாக்களின் அளுகையின் கீழிருந்த காலம் 467 ஆண்டுகள்

- இஸ்ரவேலர் ராஜாக்களின் அளுகையின் கீழிருந்த காலம் 467 ஆண்டுகள் (கிமு. 1053-586) யூதாவின் சிறையிருப்பின் காலம் எரேமியாவின் தீர்க்கதரிசனத்தின்படியே 70 ஆண்டுகள் (எரே 25:8-11)

- கிமு 539ல் பேரரசனான கோரேஸ் பாபிலோனிய பேரரசை வீழ்த்திய பின்பு சிறையிருப்பிலிருந்த யூதர்களை யூதேயாவுக்கு திரும்பிச்செல்ல அனுமதித்தான்.

- தெற்கு இராஜ்யமாகிய யூதாவின் இரண்டு கோத்திரத்தார்களுக்கு சிறையிருப்பி லிருந்து திரும்பிச்சென்று சொந்த நாட்டைக் மீண்டும் கட்டியெழுப்ப ராஜகட்டளை பிறப்பிக்கப்பட்டது போல வடக்கு இராஜ்யமாகிய இஸ்ரவேலின் பத்து கோத்திரத்தார்கள் திரும்பிச்செல்ல எந்தக் கட்டளையும் பிறப்பிக்கப்படவில்லை.

## வம்சவரலாற்றின் முக்கியத்துவம் (அதிகாரங்கள் 1-9)

* 1 நாளாகமம் தாவீதை மையமாகக்கொண்டு அமைந்துள்ளது (அவனது வம்சாவழியும் ராஜரீக செயற்பாடுகளும்)

1 நாளாகமம் வேதாகமத்தில் உள்ள வம்சவரலாற்று பட்டியலில் மிக முழுமையான 3000 ஆண்டுகால வம்சவரலாற்றை உள்ளடக்கிய பட்டியலை ஆதாமிலிருந்து ஆரம்பித்து ஆவணப்படுத்தியுள்ளது.

இந்தப் புத்தகம் சுவாரசியத்திற்காக எழுதப்படாமல் உயர்வான தகவல்களை அறிவிக்கும் பொருட்டு எழுதப்பட்டதே முழுமையான வம்சவரலாறு இடம்பெற்றதற்கான காரணம்.

யூதர்களுக்கு வம்சவரலாறு மிக முக்கியமானது, திருமணங்கள் செய்வதற்கோ, நிலங்களை வாங்கவோ, விற்கவோ, ஒரு குறிக்கப்பட்ட பதவிக்கோ, பொறுப்பிற்கோ நியமிக்கப்படுவதற்கான தனிநபர் அல்லது குடும்பத்தின் தார்மீக உரிமையை நிலைநாட்டவோ, ஆசாரித்துவத்தை பெறுவதற்கோ வம்சவரலாறு அவர்களுக்கு அவசியமானது.

ஒருவர் மேசியா என்று காண்பிக்க அவரது வம்சவரலாற்றைக்கொண்டு அதை நிரூபிக்க வேண்டும் (மத்தேயு அதி 1 பார்க்கவும்).

இந்த வம்சவரலாறுதான் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஜனங்களுக்கு அவர்களுக்கு ஒரு பலமான பின்னணி இருக்கிறது என்பதையும் "தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள்" என்கிற பரிசுத்த நிலை சிறப்பாக பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் உறுதிப்படுத்தியது.

* அவர்களுக்கு பலமான பின்னணி இருந்தது மாத்திரமல்ல மேசியாவை எதிர்பார்திருப்பதற்கான உறுதியான காரணமும் இருந்தது.

இந்தப் புத்தகம் சம்பவங்களை சிருஷ்டிப்பு சிறையிருப்பு கிறிஸ்து என்ற வம்சவழியில் விளக்குகிறது.

## வடிகட்டப்பட்ட ஒரு வரலாறுப்பதிவு

2 சாமுவேல் புத்தகமும், 1-ம், 2-ம் இராஜாக்கள் புத்தகங்களும் இஸ்ரவேலினதும், யூதாவினதும் மன்னராட்சிகளையும் குறிப்பாக அவர்களது பாவங்களையும் அதனால் அவர்கள் சிறையிருப்பிற்கு செல்ல நேர்ந்ததையும் சொன்னது.

ஆனால் சிறையிருப்பின் முடிவில் எழுதப்பட்ட நாளாகமப் புத்தகங்கள் இதற்காக ஜனங்கள் பாடுகளை ஏற்கனவே அனுபவித்துவிட்டால் அதைக்குறித்து கவனம் செலுத்தவில்லை.

சிறையிருப்பிலிருந்து திரும்புகிற யூதர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டிய வரலாற்று நிகழ்வுகளோடு, கர்த்தரின் ஆசீர்வாதத்தை கொண்டுவரும் கீழ்ப்படிவு -ஆலயத்திற்கும், ஆசாரித்துவத்திற்குமான முக்கியத்துவம் - தாவீதின் வம்சத்தாருக்கு வழங்கப்பட்ட நிபந்தனையில்லாத வாக்குத்தத்தங்களும் இப் புத்தகத்தில் சொல்லப்படுகிறது.

ஜனங்களுக்குள் திரும்பவும் ஒழுங்கையும் கீழ்ப்படிவையும் கொண்டுவருவதே இதை எழுதியவரின் நோக்கமாகும்.

## கர்த்தரை மையப்படுத்திய ஒரு வரலாறுப்பதிவு

தாவீதின் வெற்றிகளும், சாதனைகளும் ஆலயத்திலேதான் உச்சநிலையை அடைகிறது. உடன்படிக்கைப்பெட்டியை திரும்ப எருசலேமிற்கு கொண்டுவர சரியான ஒழுங்குகளை மேற்கொண்டது (அதி 13,15,16)

எதிர்காலத்தில் ஆலயம் கட்டப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிலமாகிய எபூசியனாகிய ஓர்னானின் போரடிக்கும் களத்தை அதற்கான விலையை கொடுத்து வாங்கியது (21:15-30)

தாவீது தீர்க்கதரிசியாகிய நாத்தானிடம் கர்த்தரின் ஆலயத்தை குறித்து தனக்கு ஒரு திட்டம் இருப்பதை தெரிவித்தான் ( 17:1-2).

ஆனால் கர்த்தரோ அவனுக்காவும், ஜனத்திற்காகவும், ஆலயத்திற்காவும் தமக்கு ஒரு திட்டம் இருப்பதை தாவீதிற்கு தெரிவித்தார்.

இஸ்ரவேலுக்கான திட்டம் (22:9)

தாவீதிற்கான திட்டம் (22:10ஆ)

ஆலயத்திற்கான திட்டம் (22:6-11)

வனாந்தரத்தில் ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரி மோசேக்கு வெளிப்படுத்தபட்டிருந்தது போலவே (யாத் 25:9,25:40 பார்க்கவும்)எருசலேம் தேவாலயத்திற்கான திட்டத்தின் மாதிரி தேவனால் தாவீதிற்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது (28:11-12)

## 1நாளாகமத்தின் முக்கிய பகுதிகள்

**I.**வம்சவரலாற்று பட்டியல் **(**அதி **1-9)**

இந்த வம்சவரலாற்று பட்டியல் ஆதாமிலிருந்து ஆரம்பித்து (1:1) இதை எழுதியவரின் காலம் வரை நீள்கிறது (அதி 9)

**II.** தாவீதின் அரசாட்சி **(அதி 10 -29)**

1) சவுலின் இறுதி நாட்களும், மரணமும். தாவீதின் ஆரம்பகால ஆட்சி (அதி 10-12)

2) உடன்படிக்கை பெட்டியை எருசலேமிற்கு கொண்டுருதல் (அதி 13-16). பெட்டி அசைந்தபோது அது விழாமல் தடுக்க பெட்டியை பிடித்ததினால் இறந்த உசியாவின் சம்பவம் உட்பட (அதி 13).

3) ஆலயத்தை கட்ட தாவீது விரும்பினாலும் அதிக இரத்தத்தை சிந்தினவன் என்பதால் அதை கட்டாமல் தடுக்கப்படுதல் (அதி 17)

(4) தாவீதின் யுத்தங்கள் பற்றிய விபரங்கள் (அதி 18-20)

5) ஜனத்தை தொகையிடலும் வாதையும் (அதி 21).

6) ஆலயக்கட்டுமானத்திற்கான தாவீதின் ஆயத்தப்பணிகள் (அதி 22).

7) வேலியர்களுக்கான பணிகள் வகுக்கப்படுதல் (அதி 23).

8) ஆட்சி ஒழுங்குகள் (அதி 24).

9) தாவீதின் கடைசி வார்த்தைகளும் மரணமும் (அதி 28-29).